முன்னிலை: திருமதி. அனிதா ஆனந்த், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
சார்பு நீதிமன்றம், பண்ருட்டி

HMOP No.15/2020

எ.ம.சா.1 நாள் : 22.06.2026

| | |
|---|---|
| பெயர் | ராஜலட்சுமி |
| வயது | 35 |
| தந்தை பெயர் | கந்தசாமி |
| முகவரி | எண்.13/48, சுப்புராய தெரு, வி.மருதூர், விழுப்புரம் வட்டம் மற்றும் மாவட்டம். |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 22nd day of June 2026

**<u>மனுதாரர் தரப்பில் எ.ம.சா. 1 குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் உள்ள விபரம் எனக்கு தெரியும். நான் பி.ஈ. பட்டப்படிப்பு படித்துள்ளேன். தற்போது நான் பணி ஏதும் செய்யவில்லை. நான் கடந்த 6 வருடங்களாக எந்த பணிக்கும் செல்லவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 25 பவுன் தங்க நகைகள் எனக்கும், 5 பவுன் தங்க நகைகள் மனுதாரருக்கும், சுமார் 2.5 லட்சம் மதிப்பு மிக்க வீட்டு உபயோக பொருட்கள் திருமணத்திற்காக கொடுக்கப்பட்டதாக ஆதாரமாக வாங்கி பொருட்களின் ரசீது, புகைப்படம், வாங்க பயன்படுத்தப்பட்ட பணத்திற்கான ஆதாரம் குறித்து ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

2. சீர் பொருட்கள் குறித்து எங்களுக்குள் ஒப்பந்தம் ஏதும் செய்யப்பட்டதா என்றால் இல்லை. 25 பவுன் தங்க நகைகள் குறித்து விபரமாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. பதிலுரையில் இருச்சக்கர வாகனத்திற்காக 70 ஆயிரம் ரூபாய் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பணம் கொடுத்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை பணமாக

கொடுக்கப்பட்டது.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் 75 ஆயிரம் கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றாலும், பதிலுரையில் 70 ஆயிரம் என்று கூறியுள்ளேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் வரதட்சனை கோரியதாக நான் புகார் ஏதும் காவல் துறையினரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு முன்பு சென்னையில் பணிபுரிந்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் வளைகாப்பு எனது புகுந்த வீட்டில் செய்யப்பட்டதாகவும், பின்னிட்டு நான் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனது பதிலுரையில் வளைகாப்பு எனது வீட்டில் நடந்ததாகவும் மனுதாரர் தரப்பில் யாரும் வரவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் எனது மாமியார் வீட்டில் தான் வளைகாப்பு நடந்தது.

5. எங்களுக்கு குழந்தை பிறந்த போது எனது கணவரும் அவரது பெற்றோரும் மருத்துவமனையில் வந்து பார்த்த போது எங்களுக்குள் பிரச்சனை ஏதும் இருந்ததா என்றால் சரியல்ல இருந்தது. எனது பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எனது கணவர் வீட்டினர் குழந்தையை வந்த பார்க்கவில்லை என கூறியிருந்தால் அது தவறு என்றால் எனது கணவர் மட்டும் வந்த பார்த்தார். அவரது பெற்றோர் வரவில்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் குழந்தையை அனைவரும் வந்து பார்த்தனர் என்றாலும் சரியல்ல.

6. எந்த தேதியில் நான் எனது கணவரை என்னை திரும்ப அழைத்து செல்ல அனுகினேன் என குறிப்பிட்டு பதிலுரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். நான் அனுகியதற்கு ஆதாரமாக நான் அனுப்பிய குறுந்தகவல் அல்லது மின்னஞ்சல் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. மனுதாரர் என்னை திரும்ப அழைத்து செல்ல 10 பவுன் நகை மற்றும் 5 லட்சம் ரூபாய் கேட்டதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் என்று கூறவில்லை என்றால் சரிதான். தேதி எனக்கு நினைவில்லை. வரதட்சனை கேட்டதாக நான் காவல்

நிலையத்தில் அப்போது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நானும் என் கணவரும் எவ்வளவு காலமாக பிரிந்திருக்கிறோம் என்றால் 1 மாத காலம் தான் நானும் அவரும் சேர்ந்து வசித்திருப்போம்.

8. குழந்தை பிறந்த பிறகு என் அம்மா வீட்டில் வசித்து வந்த போது எனது குழந்தைக்கு 2.5 வயதான பிறகு நான் காவல் நிலையத்தை என் கணவருடன் சேர்த்து வைக்கும்படி அனுகினேன். அதன் பின்னிட்டு நான் 2019 ஆகஸ்ட் மாதத்தில் பண்ருட்டியில் உள்ள எனது கணவரின் வீட்டிற்கு வந்து வசித்து வந்தேன். அந்த 6 மாதம் அவர் பணிபுரியும் சென்னையிலிருந்து மாதம் இருமுறை வந்து எங்களை பார்த்து சென்றார். 30.01.2020 வரை நான் அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வந்தேன். அன்று தான் வலுக்கட்டாயமாக நான் அவர் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டேன்.

9. எனக்கு 2017ல் குழந்தை பிறந்த பிறகு 2019 வரை நான் பெங்களூரில் தனியாக தங்கி வேலை செய்தேன் என்றால் இல்லை. அந்த காலக்கட்டத்தில் எனது கணவரின் உடன் நலம் குறித்து நான் மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன் என்றால் இல்லை. எனது மின்னஞ்சல் முகவரி rajalakshmikece@gmail.com ஆகும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.16 ஆவணமான மின்னஞ்சல் என்னால் அனுப்பப்பட்டது என்றால் எனது மின்னஞ்சல் முகவரியிலிருந்து அனுப்பப்பட்டது ஆனால் அதை நான் அனுப்பவில்லை.

10. நான் என் பெற்றோர் பேச்சை கேட்டு தான் 50 லட்சும் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு போட்டிருப்பதாகவும் அதில் தனக்கு விருப்பமில்லை என்வும் மேற்படி மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அந்த மின்னஞ்சசை நான் அனுப்பவில்லை. நான் தான் அந்த மின்னஞ்சலை அனுப்பினேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதன் பிறகு விழுப்புரம், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு புகாரை நான் கொடுத்தேன் என்றால் சரிதான். தேதி நினைவில்லை. அந்த புகாரை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. அதன் பிறகு காவல் நிலையத்தில் 27.07.2019 அன்று நாங்கள் சேர்ந்து வாழ்வதாக ஒரு கடிதம் கொடுத்துவிட்டு, அதன் அடிப்படையில் வழக்கு முடிக்கப்பட்டது என்றாலும் அதன் பின்பு

நாங்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்தோம் என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.17 ஆவணம் நான் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த மேற்படி ஆவணம் என்றால் சரிதான். அக்கடிதத்தில் என் பெற்றோர் வற்புறுத்தலால் என் கணவர் மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் புகார் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் அவ்வாறு எழுதிக்கொடுக்க சொன்னதால் அவ்வாறு எழுதிக்கொடுத்தேன். என்னை யாரும் வற்புறுத்தவில்லை என்றாலும், நான் தான் அவ்வாறு எழுதிக்கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

12. அதன் பிறகு நான் எனது கணவரின் பெற்றோர் வீட்டில் தங்கியிருந்த 6 மாத காலத்தில் எத்தனை முறை தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என்று கேட்டிருப்பேன் என்றால் கேட்டதில்லை. அந்த 6 மாத காலக்கட்டத்தில் மீண்டும் அவர் வரதட்சனை ஏதும் கேட்டதாக புகார் ஏதும் காவல் நிலையத்தில் கேட்டேனா என்றால் இல்லை. 30.01.2020 அன்று நான் மனுதாரரின் பெற்றோர் வீட்டிலிருந்து வெளியேறிய போது நான் அங்கு இல்லை மனுதாரர் எங்கு இருந்தார் என்று எனக்கு தெரியாது.

13. எனது பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மனுதாரர் என்னை வீட்டை விட்டு வெளியேற்றியதாக பக்கம் 4ல் கடைசி பத்தியில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த நேரத்தில் மனுதாரர் அங்கு இல்லை என்பது தான் சரி. 30.01.2020க்கு பிறகு என்னை வீட்டை விட்டு வெளியேற்றியதற்காக நான் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் அன்று கொடுக்கவில்லை 10.02.2020 அன்று பண்ருட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கான ரசீதும் உள்ளது. அன்றைய தினம் மனுதாரர் என்னை பார்க்க என் பெற்றோர் வீட்டிற்கு வந்தார் என்றால் இல்லை. அவர் வந்தார் என்றாலும், நானும் என் பெற்றோரும் அவரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டேன் என்றாலும் சரியல்ல.

14. 30.01.2020 நான் என் வீட்டிற்கு சென்ற பிறகு உடனடியாக நான் சென்னைக்கு என் கணவரை பார்க்க சென்னைக்கு சென்றேன் என்றால் சரிதான். பிப்ரவரி 4 அல்லது 5 தேதியில் சென்றேன். அங்கு சென்னையில் நான் 2 நாட்கள் அவருடன் இருந்தேன். 7ம் தேதி அவருடைய பெற்றோர் மற்றும் அவரது உறவினர் அங்கு வந்தனர்.

அங்கும் சித்திரவதை தொடர்ந்து, வலுக்கட்டாயமாக நான் அங்கிருந்து வெளியேற்றப்பட்டேன். நான் அங்கு காவல் நிலையத்தில் இது குறித்து புகார் ஏதும் கொடுக்கவில்லை. 07ம் தேதி மனுதாரரின் உறவினர்கள் யாரும் வரவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

15. மனுதாரர் 06.02.2020 அன்று விவாகரத்து கோரி எனக்கு ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த தேதியில் நான் சென்னையில் இருந்ததால் எனக்கு தெரியாது. 06.02.2020 அன்று சட்ட அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டது என்றாலும், அதை நான் வாங்க மறுத்து திருப்பிவிட்டேன் என்றாலும் சரியல்ல. அதன் பிறகு பண்ருட்டி, பூங்குணத்தில் உள்ள மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு பொருட்களை எடுக்க எப்போது வந்தேன் என்றால் எனக்கு நினைவில்லை. நானும் என் தந்தையும் வந்தோம் என்றால் சரிதான்.

16. ம.சா.ஆ.7 ஆவணமான பொருட்களின் பட்டியல் அட்டவணையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் கையொப்பம் என்னுடையது தான் ஆனால் அது பூர்த்தி செய்யப்படாத வெள்ளை தாளில் பெறப்பட்டது. அதில் விபரம் எழுதப்பட்ட கையெழுத்து என்னுடையதல்ல. நான் தான் எழுதிக்கொடுத்தேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் அன்றைய தினம் என்னை மிரட்டி ம.சா.ஆ.7 ஆவணத்தில் கையொப்பம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு நான் புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக நான் மிரட்டியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

17. 10.02.2020 அன்று பண்ருட்டி, மகளிர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் ம.சா.ஆ.19 ஆவணம் என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகாரை கடலூர் சமூக நலத்துறைக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். விசாரணையில் வரதட்சனைக்கு எந்த வித முகாந்திரமும் இல்லை என அறிக்கை அனுப்பப்பட்டது என்றால் எங்களை சரியாக

விசாரணை செய்யவில்லை. இருத்தரப்பினரும் ஆஜரானோம். கோவிட் தொற்று காலம் என்பதால் சரியாக விசாரணை செய்யவில்லை. மேற்படி அறிக்கை ம.சா.ஆ.15 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

18. எனது பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மனுதாரர் விசாரணைக்கு அஜராகவில்லை என பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பொய் புகார்களை கொடுத்து, தனிக்குடித்தனம் கேட்டு மனுதாரருக்கு மனஉளைச்சல் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் வரதட்சனை கொடுமை ஏதும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு விவாகரத்து கொடுக்க விருப்பம் இருந்தும் மனுதாரரிடம் பணம் பெற எண்ணி விவாகரத்து கொடுக்க மறுக்கிறேன் என்றால் ச ரியல்ல. மனுதாரருடன் சேர்ந்து வாழ மனு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமின்றி தான் என்னுடைய பொருட்களை எடுத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு தேவையான பொருட்களை தான் எடுத்து சென்றேன். பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் முன்னுக்கு பின் முரனாக மனுதாரரை மனஉளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ளவாறு விவாவரத்து வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

சாட்சியின் கையொப்பம்

Taken down before me in open court and read over and explained. Understood and acknowledged by the witness to be correct.

ANITHA ANAND Digitally signed by ANITHA ANAND

Sub Judge, Panruti